[1991 சனவரி 22

அவர்களை மாறுதல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இரண்டாவது, நிர்வாகக் காரணத்தினால் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிற நேரத்தில் மிகவும் ஆலோசித்த பிறகுதான் அவர்களை அந்த இடத்தில் நாம் பணியில் அமர்த்துகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே காலதாமதம் ஏற்படுமானால் சமூக நல இயக்குநருக்கு அவர்கள் அக்குறையை எடுத்துச் சொல்லி குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெறலாம்.

ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

*9994—திருமதி யசோதா செல்லப்பா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் எத்தனை?

(ஆ) எந்த அடிப்படையில் ஆதரவற்ற குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் அரசால் 22 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அந்த இல்லங்களில் 5 வயது பூர்த்தி அடைந்த மாணவ, மாணவிகள், தாயோ, தந்தையோ இல்லாதவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச உடை, பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், மருத்துவ உதவி மற்றும் கல்வி அளிக்கப்படுகிறது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அந்த இல்லத்திலேயே அவர்களுக்குக் கல்வி வழங்கப்படுகிறது. ஐந்தாம் வகுப்பிற்குமேல் அருகிலுள்ள அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு, பள்ளி இறுதித் தேர்வு வரையில் அவர்கள் அங்கே தங்கிப் பயிலுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறோம்.

1991 சனவரி 22]

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களைப் போல கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களுக்குத் தமிழக அரசின் மூலம் ஏதேனும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா? அப்படிப்பட்ட, கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப் படுகிற அநாதை இல்லங்களுக்கு, தமிழக அரசின் மூலமாகப் பரிந்துரை செய்தால், அநாதைக் குழந்தைகளை எடுத்துக் கொள் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவியுடன் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தின் உணவூட்டும் செலவினமாக ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் 90 ரூபாயை இந்த அரசு வழங்கி வருகிறது.

திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

*9775—**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சட்ட விதிகளின்படி கட்டப்பட வேண்டிய ஓய்வு அறை, சாப்பாட்டுக் கூடம், கழிப்பறை ஆகியவை கட்டப்படாமலும், சட்டப்படியான வேலை நேரம் அனுசரிக்கப்படாமலும் உள்ள தொழிற்சாலை உரிமையாளர்கள்மீது அரசு ஏதேனும் நட வடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாதாரணமாக 150 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றும் தொழிற்சாலைகளில்தான் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளின்படி ஓய்வறை பராமரிக்கப்படவேண் டும். இச்சட்டப்படி ஓய்வறை பராமரிக்கப்படவேண்டிய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏதும் திண்டுக்கல்லில் இல்லை. அனைத்துத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் கழிப் பறை வசதிகள் உள்ளன.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் விதி 95-இன் கீழ் உள்ள ஷெட்யூல்-IX—இன்படி உணவருந்தும் அறை ஒன்று பராமரிக்கப்படவேண்டும். திண்டுக்கல் பகுதியில் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் பதியப்பெற்ற 46 தொழிற்சாலை களில் 36 தொழிற்சாலைகளில் உணவருந்தும் அறை பராமரிக்கப்